கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் எதையெல்லாமோ சொல்லிவிடலாம். வாய்க்கால் வெட்ட வேண்டுமென்றால் குறைந்தது 25 ஏக்கர் என்ற அளவிற்காவது வெட்டவேண்டும். அதே நேரத்தில் அங்கே இருக்கக்கூடிய புஞ்சைப் பயிர் சாகுபடி செய்யவேண்டும். எல்லா இடத்திற்கும் பாசன வசதி கிடைக்கவேண்டும் என்றால் நிலத்தை சமப்படுத்த வேண்டும். இதற்காக நீர்ப்பாசன கமிஷனிடமிருந்து 10, 12 கோடி ரூபாய் உதவி பெற்றிருக்கிறோம். இவைகளை எல்லாம் செயல்படுத்தவேண்டும். இவையெல்லாம் டைம் கன்ஸுமிங் ப்ராசஸ்--கொஞ்சகாலம் ஆகத்தான் செய்யும்.

வாலாஜா ஏரிப் புறம்போக்கு, பின்னலூர்

* **524 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா —

(அ) சிதம்பரம் தாலுக்காவில் பின்னலூர் கிராமத்தில் வாலாஜா ஏரிக்குப் பக்கத்தில் சுமார் 500 ஏக்கருக்குமேல் கிடக்கும் புறம்போக்கில் பயிரிடும் விவசாயிகளிடமிருந்து அடமானம் கோரி அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) About 167 persons have encroached upon the land in R.S. No. 135 known as Wallajah Eri poramboke in Pinnalur village, Chidambaram taluk. Of these, four persons applied to the Tahsildar, Chidambaram, for assignment of land.

(*b*) As the portions occupied by them lie in the water-spread and submersible area of the tank, their request for assignment was not considered.

மாநிலத்திலுள்ள தரிசு நிலங்கள்

* 525 **கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழகத்திலுள்ள பயன்படுத்தப்படாத மொத்த தரிசு நிலங்களின் பரப்பளவு எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : The Uppal Committee which visited this State in 1960 and surveyed blocks of over 250 acres of land has reported that an extent of 38,466 acres could be reclaimed. The Special Officer appointed for making recommendations regarding the implementation of a centrally sponsored scheme for the settlement of landless agricultural labourers has surveyed blocks of less than 250 acres and has reported that an

30th March 1966]

extent of 66,015 acres is available for the implementation of the scheme. The extent of other isolated patches of lands not covered by the two surveys mentioned above is not known.

திரு. எம். எஸ். மணி : ஸார், அந்த நிலங்களை உடனடியாக விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள விவசாயிகளுக்கு அரசு அனுமதி தருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இவர்கள் ஆலோசனை கூறியிருப்பது விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டால் மட்டும் போதாது, விவசாயம் செய்ய நிரந்தரமாக பல கடன் வசதிகள், விவசாயத் தேவைகள் பூர்த்தி ஆகவேண்டும் என்பது. கிணறு தோண்ட வேண்டியதாக இருக்கும், ரிக்ளமேஷன் செய்யவேண்டியதாக இருக்கும். இப்போது ஒரு திட்டம், மத்திய அரசாங்க உணவு—விவசாய இலாகா மூலமாக, அவர்கள் கூறி இருக்கும் ஆலோசனை, ஒரு விவசாயி போய்க் குடியேற ஏறத்தாழ ரூ. 5,000 செலவு ஆகும் என்பதாகும். அந்த அடிப்படையில் தான் இந்த நிலங்கள் சாகுபடிக்கு வர முடியும். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. ஏ மதியழகன் : தலைவர் அவர்களே, இந்தத் தரிசு நிலங்கள் பல ஆயிரம் ஏக்கர் இருப்பதிலே, யுத்த கால அடிப்படையில், லாண்ட் ஆர்மி—பூமி சேனை—அமைத்து, உணவு உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்ய அரசாங்கத்திடம் ஏதேனும் செயற்குறிப்பு உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலே ஒவ்வொரு விவசாயியும் விவசாயத்தில் ஒரு பெரிய வீரன் மாதிரித்தான் செயல்பட முடியும். அவர்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுத்தால் போதும், ஆர்மி ஒன்றும் தேவையில்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது அமைச்சர் கூறிய பதிலில் சாதாரண ஏழைகள் அந்த நிலங்களைச் சாகுபடி செய்ய முடியாது என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் அதை ஒரு சில நிலப் பிரபுக்களுக்கோ அல்லது தொழில் அதிபர்களுக்கோ பிரித்துக் கொடுக்க ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் சொன்ன பதிலில் மற்றொரு பகுதியை விட்டு விட்டார்கள். நிலத்தைக் கொடுத்துவிட்டால் போதாது, அதற்கு வேண்டிய சாதனங்களை அரசாங்கமே செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். பெரிய நிலப்பிரபுக்களுக்கோ, மற்றவர்களுக்கோ கொடுக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அமைச்சர் கொடுத்திருக்கும் விவரத்தில் உபயோகப்படுத்தப்படாது இருக்கிற நிலத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சர்க்கார் புறம்போக்கு நிலங்கள்

மற்றவர்கள் அனுபவத்தில் இருந்து அபராதத் தீர்வைக்குட்பட்டு இருக்கிற நிலங்களின் விவரங்கள் இருக்கிறதா? அதைப்பற்றி சொல்ல முடியுமா?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

கிராம மணியக்காரர்கள் நியமனம்

*526 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் கிராமங்களில் உள்ள பரம்பரை மணியக்காரர் பதவிகளை மாற்றி தகுதி அடிப்படையில் நியமிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

கனம் திரு. வெ. ராமையா : ஆம்.

திரு. செ. மாதவன் : ஸார், இந்திய தலைமை நீதி மன்றம் இது பற்றி ஒரு தீர்ப்பு வழங்கி நீண்ட நாள் ஆகிவிட்டது. இதைப் பரிசீலிக்க ஒரு காபினெட் சப்-கமிட்டி போட்டு பரிசீலிக்கப்படும் என்று பல ஆண்டுகளுக்கு முன் இந்த மன்றத்தில் சொன்னார்களே, அந்த காபினெட் கமிட்டியின் கதி என்ன ஆயிற்று?

கனம் திரு. வெ. ராமையா : கதி நல்ல கதிதான். காபினெட் சப்-கமிட்டி இந்தப் பிரச்னை மட்டுமல்ல, அதோடு பல பிரச்னைகள், நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய வில்லேஜ் ஆபீஸர்களுடைய வேலை, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியம், கொடுக்க வேண்டிய மரியாதை எல்லாவற்றையும் பூர்ணமாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்தார்கள். அந்த அடிப்படையில் பல வசதிகளைச் செய்துகொடுக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தப் பதவியை நிரந்தரமாக பரம்பரையாக உள்ளவர்களுக்குக் கொடுப்பது ஒரு பிரச்னை. இருக்கிற பிர்க்கா, வில்லேஜிலில் மாற்றி அமைத்து இப்போது இருக்கக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டுமென்று போர்டு ஆஃப் ரெவின்யூவிலிருந்து ப்ரொபோஸல் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பற்றியும் அண்மையில் முதல் அமைச்சர் அவர்கள் இவர்களுடைய மாநாட்டில் பேசும்போது எல்லாவற்றையும் பரிசீலித்து ஒருவருக்கும் பாதகம் இல்லா முறையில் செயல் திட்டம் உருவாக்கப் போவதாகச் சொன்னார்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது கேள்வி பரம்பரை பாத்தியத்தைப் பொறுத்தது. சுப்ரீம் கோர்ட்டில் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தீர்ப்பு வந்த பிறகு புதிதாக நியமனம் செய்கிறவர்களை எந்த அடிப்படையில் நியமனம் செய்வது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது வரையில் எங்கேயாவது வேக்கன்ஸி வரும் பட்சத்தில் நியமனம் செய்து கொண்டிருக்கிறோம்.